# திருமலை வைகுண்ட ஏகாதசி: 10 நாள்கள் வைகுந்த வாயில் தரிசனம்

**திருப்பதி, நவ.25:** திருமலையில் ஜனவரி 10-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வைகுந்த வாயில் தரிசனம் வழங்கப்படும் என்று தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

வைகுண்ட ஏகாதசியையொட்டி கூடுதல் செயல் அதிகாரி வெங்கையா செளத்ரி ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார். இதில், ஜனவரி 10-ஆம் தேதி வைகுண்ட ஏகாதசி வருவதால், 10 முதல் 19-ஆம் தேதி வரை 10 நாள்களுக்கு பக்தர்களுக்கு வைகுண்ட தரிசனம் வழங்கப்படுகிறது. இதற்கு, 40 நாள்கள் மட்டுமே உள்ளதால், துறை அலுவலர்கள் தயாராக இருக்க, கூடுதல் செயல் அதிகாரி உத்தரவிட்டார்.

இந்த பத்து நாள்களும் வைகுண்ட வாயில் வழியை தரிசிப்பதில் சாதாரண பக்தர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சாமானிய பக்தர்களுக்கு அதிக தரிசன நேரத்தை வழங்குவதற்காக வழங்கப்படும் டிக்கெட் ஒதுக்கீடு மற்றும் பிற பிரச்னைகள் குறித்து இன்னும் இரண்டு வாரங்களில் மற்றொரு ஆய்வுக் கூட்டம் நடைபெற உள்ளது.

வைகுண்ட ஏகாதசிக்கு ஏற்ற மலர் அலங்காரம், தங்குமிடம், ஸ்ரீவாரி சேவகர்கள், சாரணர்கள், போக்குவரத்து மேலாண்மை, சுகாதாரம் மற்றும் பிற பிரச்சினைகள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பத்து நாள்களுக்கும் விஐபி பிரேக் தரிசனங்கள் (புரோட்டோகால் விஐபிகள் தவிர) ரத்து, 10 முதல் 19-ஆம் தேதி வரை சாந்தி குழந்தைகள், முதியோர், மாற்றுத்திறனாளிகள், ராணுவம், என்ஆர்ஐ தரிசனம் ரத்து, ஜனவரி 9- 19 வரை ஆர்ஜித சேவைகள் ரத்து, 10-இல் தங்கத்தேர் வலம், 11-ஆம் தேதி தீர்த்தவாரி உள்ளிட்டவை எஸ்.வி.பி.சி.யில் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

மாத்ருஸ்ரீ தரிகொண்டா வெங்கமாம்பா அன்னப்பிரசாத மையத்தில் 10 நாள்களுக்கு காலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை அன்னபிரசாதம் வழங்கவும் முடிவெடுக்கப்பட்டது. நிகழ்ச்சியில் தேவஸ்தான மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### ஏழுமலையான் தரிசனம்: 8 மணி நேரம் காத்திருப்பு

**திருப்பதி, நவ. 25:** திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் திங்கள்கிழமை தர்ம தரிசனத்தில் 8 மணி நேரம் காத்திருந்தனர்.

பக்தர்களின் வருகை குறைந்துள்ள நிலையில், தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) 8 மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணிநேரமும், இலவச நேரடி தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கு 3 முதல் 4 மணிநேரமும் ஆனது.

இதற்கிடையே, ஞாயிற்றுக்கிழமை முழுவதும் 75,737 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 23,208 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்ப்பித்த காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.4.14 கோடி வசூலானது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# கல்வி முன்னேற்றத்தால் தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது

## சட்டப்பேரவை துணைத் தலைவர்



மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிய சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி. உடன், விஐடி வேந்தர் கோ.விசுவநாதன், வேலூர் சட்டப்பேரவை உறுப்பினர் ப.கார்த்திகேயன், தமிழியக்கம் மாநில செயலர் மு.சுகுமார், அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாளர் கே.ஜவரிலால் ஜெயின் உள்ளிட்டோர்.

**வேலூர், நவ. 25:** கல்வி முன்னேற்றம் காரணமாக தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது என தமிழக சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி தெரிவித்தார்.

அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை சார்பில் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா வேலூர் விஐடி அண்ணா அரங்கத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவில், பங்கேற்ற சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி கல்வி உதவித்தொகைகளை வழங்கி பேசியது -

ஏழை மாணவ, மாணவிகளும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் விஐடி வேந்தர் கோ.விசுவாதன் அனைவருக்கும் கல்வி அறக்கட்டளை மூலம் கல்வி உதவித்தொகை வழங்கி வருவது சிறப்பானது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அரசு பொறுப்பேற்று கடந்த மூன்றரை ஆண்டுகளில் மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டுக்காக புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் உள்பட ஏராளமான திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.

கருணாநிதி உயர்கல்வியை இலவசமாக்கியதன் விளைவாக நாட்டின் உயர்கல்வி விகிதம் 27 சதவீதமாக இருந்தாலும், தமிழகம் 50 சதவீதம் அளவுக்கு உயர்வு பெற்றுள்ளது. இதன்மூலம், பல்வேறு நாடுகளிலும் தமிழர்கள் பணியாற்றும் அளவுக்கு கல்வியில் முன்னோடியாக திகழ்கிறது. இளைஞர்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்தர இந்த அரசு முழுமுயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அந்தவகையில், தமிழகம் இந்தியாவுக்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது என்றார்.

**விஐடி வேந்தர் கோ.விசுவாதன்:** வேலூர் என்பது இந்தியாவுக்கே முன்மாதிரி மாவட்டமாகும். 1806-இல் வேலூர் கோட்டையில் நடந்த சிப்பாய் புரட்சிதான் நாட்டின் சுதந்திரப் போராட்டத்துக்கு வித்திட்டது. இந்துக்களும், இஸ்லாமியர்களும் ஒற்றுமையுடன் வாழும் மாவட்டமாகும்.

வரலாற்றில் பல போர்களை சந்தித்த வேலூர் மாவட்டம், கல்வியிலும், பாலாறு வறண்டதால் விவசாயத்திலும் பின்தங்கியதால் பொருளாதாரத்திலும் பின்தங்கி விட்டது. இதனை எல்லோருக்கும் கல்வி கொடுப்பதன் மூலமாக மட்டுமே மாற்ற முடியும்.

அவ்வாறு கல்வியை அளிப்பதன் மூலம் வேலூர் மாவட்டத்தை ஏழைகள் இல்லாத மாவட்டமாக மாற்ற வேண்டும். அதற்காக தொடங்கப்பட்ட அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை மூலம் இதுவரை வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வரும் நிலையில் இனிமேல் திருவண்ணாமலை மாவட்டத்துக்கும் வழங்கப்படும். இந்த திட்டத்துக்கு பெரும் நிதி பங்களிப்பை விஐடி பேராசிரியர்கள் செய்து வருகின்றனர். தொடர்ந்து, வணிகர்களும், நன்கொடையாளர்களும் அளித்து வருகின்றனர்.

அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை மூலம் இதுவரை 9,400 பேருக்கு ரூ.10.65 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

மொத்தம் 720 மாணவர்களுக்கு ரூ..62 லட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. விழாவில், வேலூர் சட்டப்பேரவை உறுப்பினர் ப.கார்த்திகேயன், தமிழியக்கம் மாநில செயலர் மு.சுகுமார், அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாளர் கே.ஜவரிலால் ஜெயின், உறுப்பினர் மயிலாண்பிகை குமரகுரு, உதவித்திட்ட இயக்குநர் ப.சுந்தர்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர் போக்ஸோவில் கைது

**திருத்தணி, நவ. 25:** ஆர்.கே. பேட்டை அருகே மாணவியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர் போக்ஸோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

ஆர்.கே.பேட்டை ஒன்றியம், அய்யனேரி ஊராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இதில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் 9-ஆம் வகுப்பு மாணவிக்கு கடந்த 11.09.2024 அன்று பிறந்த நாள் அன்று தலைமை ஆசிரியர் தாமோதரன் தலையில் குட்டியதாகவும், பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாகவும் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை ஆர்.கே.பேட்டை காவல் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை புகார் செய்தார்.

இதையெடுத்து திருத்தணி டிஎஸ்பி கந்தன், ஆர்.கே. பேட்டை காவல் ஆய்வாளர் (பொ) மலர், எஸ்.ஐ. ராக்கி குமாரி ஆகியோர் பள்ளிக்கு நேரடியாக சென்று மாணவியிடம் விசாரனை செய்து தலைமை ஆசிரியர் தாமோதரனை போக்ஸோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இதுதொடர்பாக மேலும் விசாரணை நடந்து வருகிறது.


## அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்., (ஆர்சில்)

Arcil Premier ARC

CIN : U65999MH2002PLC134884 | இணையத்தளம்: www.arcil.co.in

(M/s. யுனிவர்சல் ட்ரேடர்ஸ் (UT) & ப்ரகதீஸ்வரா மார்க்கெட்டிங்-ன் நிதிச்சொத்துக்கள் தொடர்பாக உருவாக்கப்பட்ட Arcil-Retail Port-004-E Trust-ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)

ஆர்சில் அலுவலகம்: தி ரூபி, 10ஆவது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை-400028.

பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் '2002 (சர்ஃபாசி சட்டம்) - உடன் படிக்க - பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 & 9 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி ஆன்லைன் மூலம் நடைபெறும் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(களுக்கு) அறிவிக்கப்படுவது யாதெனில், Arcil-Retail Port-004-E Trust ("ஆர்சில்") – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் (இந்தியன் வங்கியானது ஆர்சில் - க்கு 30 டிசம்பர் 2013 தேதிய பதிவு செய்யப்பட்ட பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் வாயிலாக, நிதிச்சொத்துக்கள் பணி ஒப்படைவு செய்யப்பட்டதற்கிணங்க) அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் - க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து/க்கள், இதன் கீழ்க்கண்ட விபரங்களின் படியிலான நிலுவைத்தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை வசூலிப்பதற்காக, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 - உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 மற்றும் 9 ன் கீழ், "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

| | |
|---|---|
| கடன்தாரர் பெயர் | M/s. யுனிவர்சல் ட்ரேடர்ஸ் (UT) & ப்ரகதீஸ்வரா மார்க்கெட்டிங்., அதன் உரிமையாளர் திரு AS வெங்கடேசன் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது & திருமதி V பாரதி, சோழிங்கர் டவுன், அரக்கோணம் அருகில். |
| ஜாமீன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர் | திரு AS வெங்கடேசன் & திருமதி V பாரதி, ஜாமீன்தாரர் திரு. A. N. சண்முகம், திருமதி. V. விஜயா, திருமதி. S. நபின்னை, திரு B முனுசாமி நாயுடு. |
| 21 ஜூன் 2017 தேதிய சர்ஃபாசி சட்டத்தின் படியிலான நிலுவைத்தொகை | 21 ஜூன் 2017 ம் தேதியின் படி, ரூ. 1,70,46,375.00/- (இந்திய ரூபாயில். ஒரு கோடியே எழுபது இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து முன்னூற்று எழுபத்து ஐந்து மட்டும்) மற்றும் ஒப்பந்த வீதத்தில் / ஆவணத்தில் உள்ள வீதத்தின் படி மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் 22 ஜூன் 2017 முதல் தொகையை திருப்பி செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் இதர நிகழ் செலவுகள் ஆகியன. |
| சுவாதீனம் | இந்தியன் வங்கி, சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகளின் படி, 15 டிசம்பர் 2018 அன்று அடையாள சுவாதீனம் எடுத்துள்ளது. |
| ஆய்வு தேதி | வேண்டுகோளின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும். |
| டேவணித்தொகை | இனம் 01 – ரூ. 5,50,000/- (ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br>இனம் 02 – ரூ. 21,80,000/- (இருபத்து ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)<br>இனம் 03 – ரூ. 7,70,000/- (ஏழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)<br>டேவணித்தொகையை RTGS மூலம் "அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்" என்ற பெயருக்கு நடப்பு கணக்கு எண். 02912320000561 HDFC பேங்க் லிமிட்டெட்., கிளை - லோயர் பரேல், மும்பை, IFSC Code : HDFC0000291 க்கு செலுத்தப்பட வேண்டும். |
| விலைப்புள்ளி & டேவணித் தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி | 26.12.2024 மாலை 05.00 மணி வரை |
| அடிப்படை விலை | இனம் 01 – ரூ. 55,00,000/- (இந்திய ரூபாயில் ஐம்பத்து ஐந்து இலட்சம் மட்டும்)<br>இனம் 02 – ரூ. 2,18,00,000.00/- (இந்திய ரூபாயில் ரூபாய். இரண்டு கோடியே பதினெட்டு இலட்சம் மட்டும்)<br>இனம் 03 – ரூ. 77,00,000.00/- (இந்திய ரூபாயில் எழுபத்து ஏழு இலட்சம் மட்டும்) |
| விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை | ரூ. 50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில் |
| மின்னணு ஏல தேதி & நேரம் | இனம் 01 – 27.12.2024 நண்பகல் 12.00 மணி<br>இனம் 02 – 27.12.2024 நண்பகல் 12.30 மணி<br>இனம் 03 – 27.12.2024 பிற்பகல் 02.00 மணி |
| விலைப்புள்ளி ஆவணங்களுக்கான இணைப்பு | www.arcil.co.in |
| ARCIL க்கு தெரிந்து நிலுவையிலுள்ள வழக்குகள் | அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த நிலுவை வழக்கும் இல்லை |
| ARCIL க்கு தெரிந்த வில்லங்கங்கள் / நிலுவைகள் | ஆம் - சொத்து மீது வில்லங்கங்கள் உள்ளன |
| சேலம் விடப்படவுள்ள ஜாமீன் சொத்து விபரம் | இனம் 1 - திருவள்ளூர் மாவட்டம், R.K. பேட் தாலுகா, வீரனத்தூர் கிராமம், (முன்பு வாலாஜா தாலுக்கா, வேலூர் மாவட்டம் - 631 102) சர்வே எண். 296/4, 6A, 13, 18 & 28 ல் உள்ள மொத்தம் ஏக்கர் 9.99 ஏக்கர் அதாவது 4,35,164.4 சதுர அடி (க்ளஸ்டர் 1 - 1.60 ஏக்கர்., க்ளஸ்டர் 2 - 8.39 ஏக்கர்) சொத்தின் பரப்பு - 9.99 ஏக்கர். சொத்தின் உரிமையாளர் - திரு. A. N. சண்முகம் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள்.<br>இனம் 2 - ராணிப்பேட்டை மாவட்டம் - 631 102 (முன்பு வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம்), சோளிங்கர் தாலுகா, கொண்டபாளையம் கிராமம், சோளிங்கர் நகராட்சி, பனவரம் சாலை, JJ நகர் அருகில், சர்வே எண். 146/3, 146/6, 146/8, 149 ல் அமையப்பெற்ற "திருகடிகை அவென்யூ" வில் உள்ள, ப்ளாட் எண்கள். 4, 5, 6, 7, 8, 15, 16, 17, 34, 37, 40, 41, 42, 43, 44, 45, 58, 59, 60, 61, 62, 63 & 64, ஆக மொத்தம் 71.27 சென்ட் அதாவது 31,045.50 சதுர அடி. சொத்தின் உரிமையாளர் - திரு.A.S. வெங்கடேசன், த/பெ திரு A N சண்முகம். வகை: காலி நிலம்.<br>இனம் 3 - ராணிப்பேட்டை மாவட்டம் (முன்பு வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம்), சோளிங்கர் தாலுகா, சோளிங்கர் - அரக்கோணம் சாலை, நரசிங்கபுரம், பாண்டியநல்லூர் கிராமம், சர்வே எண். 308, 309/2 ல் உள்ள மொத்த பரப்பு 25,060.25 சதுர அடி., - க்ளஸ்டர் 1 - 15606.25 சதுர அடி., க்ளஸ்டர் 2 - 4047 சதுர அடி., க்ளஸ்டர் 3 - 5407 சதுர அடி. சொத்தின் உரிமையாளர் - திருமதி. V. பாரதி, க/பெ, திரு. A.S. வெங்கடேசன்., வகை: காலி நிலம். |

விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன –

1). ஏல விற்பனையானது அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அதன் உதவியுடன் மின்னணு ஏலம் மூலம் நடைபெறும். விலைகோரல் "ஆன்லைன் மின்னணு முறை" வாயிலாக வலைதளம் www.arcil.co.in மூலம் மட்டுமே நடைபெறும். ARCIL என்பது மின்னணு ஏலத்துக்கான தளத்தை ஏற்படுத்தி கொடுக்கும் சேவைதாரராகும்.

2). ஏலமானது விலைப்புள்ளி ஆவணத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும் மற்றும் அதில் கொடுக்கப்பட்டுள்ள செயல்முறைகளின் படியும் நடத்தப்படும். ஏலதாரர்கள் ARCIL ன் வலைதளம் www.arcil.co.in யையும் அதில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு மற்றும் சேவைதாரர் ARCIL ன் வலைதளத்தையும் விலைப்புள்ளி ஆவணங்களுக்கும், ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்துக்களின் விபரங்களுக்கும் / விலைப்புள்ளி படிவங்களை பெறுவதற்கும் பார்வையிடலாம்.

3). ஏலதாரர்கள் தங்களது சொந்த அலுவலகங்கள் / அவர்களது விருப்பத்துக்குரிய இடத்திலிருந்து விலைகோரி / விலைப்புள்ளி சமர்ப்பித்து மின்னணு ஏலத்தில் பங்கேற்கலாம். அந்தந்த ஏலதாரரால் இண்டர்நெட் இணைப்பை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிகாரப்பூர்வ அலுவலர் / ARCIL / சேவைதாரர் இண்டர்நெட் தொடர்பிழப்பு, நெட்வொர்க் பிரச்சினைகள், கணிப்பொறி செயலிழப்பு, மின் துண்டிப்பு போன்ற காணரங்களுக்கு பொறுப்பல்ல.

4). விபரங்களுக்கும், உதவிக்கும், செயல்முறைக்கும் மின்னணு ஏலம் தொடர்பான ஆன்லைன் பயிற்சிக்கும் உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன், திரு யுவிக் J, திரு மிரஜ் சயீத் ஆகியோரை தொடர்பு எண்கள். 9176500311, 9962005554, 9820485425 மின்னஞ்சல் முகவரி - gurunathan.solaiappan@arcil.co.in, ragothaman.v@arcil.co.in, meraj.sayed@arcil.com ல் தொடர்பு கொள்ளலாம்.

5). வாங்குவதில் விருப்பமுள்ளவர்கள் / ஏலதாரர்கள் தங்களது பெயர்களை இதன் மேற்குறிப்பிட்ட www.arcil.co.in ல் பதிவு செய்து கொண்டு, இதன் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் நடைபெறவுள்ள மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6). சொத்து ஆய்வு மற்றும் கூடுதல் தகவல்களுக்கு உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன் 91765 00311 (அலைபேசி) gurunathan.solaiappan@arcil.co.in திரு ரகோத்தமன் V, 9962042022 (அலைபேசி) ragothaman.v@arcil.co.in, திரு மிரஜ் சயீத், 98204 85425 (அலைபேசி) meraj.sayed@arcil.co.in அல்லது இதன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

7). ஏலத்தின் எந்த நிலையிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், எந்த முன்னறிவிப்பும் வழங்காமல், விலைப்புள்ளியை / விலைகோரலை ஏற்றுக்கொள்ள / நிராகரிக்க / மாற்ற / ரத்து செய்ய அல்லது ஏலத்தை ஒத்தி வைக்க உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.

8). வாங்குவதில் வெற்றி பெற்றவர் / ஏலதாரரே சட்டப்பூர்வ நிலுவைகள் (ஏதேனும் இருப்பின்), வரிகள், செலுத்தத்தக்க கட்டணங்கள், வாங்கும் விலை மீதான GST, ஜாமீன் சொத்துக்களை தமது பெயரில் பரிமாற்றம் செய்ய / வழங்கப்பெற சட்டப்படி செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9). விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்து தொடர்பான சொத்துரிமை, வில்லங்கம் மற்றும் ஜாமீன் சொத்துக்களை பாதிக்கும் கோரிக்கைகள் / சட்டப்பூர்வ நிலுவைகள் உள்ளிட்ட நிலுவைகள் போன்றவற்றை சுய சிரத்தையுடன் விசாரித்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஏல விளம்பரம் ARCIL ன் எந்த பிரதிநிதித்துவத்தையோ உத்திரவாதத்தையோ வழங்கவில்லை., வழங்கப்போவதுமில்லை. ARCIL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த விதத்திலும் மூன்றாம் நபரின் கோரிக்கைகள் / உரிமைகள் / நிலுவைகளுக்கு பொறுப்பல்ல.

10). இந்த செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும், இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபரின் சிறந்த தகவலுக்கு எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும் அதில் ஏதேனும் பிழையோ, தவறான கூற்றோ அல்லது விடுபடல்களோ இருப்பின், அதன்கு இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபர் பொறுப்போ / பதில் கூறத்தக்கவரோ அல்லர்.

11). ஏதேனும் நீதிமன்றம் / தீர்ப்பாயத்தின் தலையீடு / உத்தரவு காரணமாக ஏற்படும் நிகழ்வுகள் / பின் விளைவுகளால், விற்பனையை ரத்து செய்ய நேர்ந்தால், (பொருத்தமான சட்ட கருத்துரை மற்றும் ARCIL க்கு உள்ள சட்டப்பூர்வ தீர்வு) ARCIL ஆனது "டேவணித்தொகை" யை வட்டியின்றி வாங்குபவர் / ஏலதாரருக்கு திரும்ப வழங்கிடும் மற்றும் / அல்லது "விற்பனை செயல்முறைகள்" திரும்ப பெற்றுக்கொள்ளும். வாங்குபவரோ / ஏலதாரரோ ARCIL அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக, இழப்பு, சேதங்கள் / செலவுகள் / வியாபார வாய்ப்பிழப்பு போன்ற எவ்விதத்திலான எந்த கோரிக்கையையும் எழுப்ப உரிமையில்லை.

12). மேற்சொன்ன நிலுவைத்தொகைகளுக்கு பொறுப்பாக உள்ள கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் இந்த விற்பனை அறிவிப்பை, இதன் மேற்குறிப்பிட்ட ஏல விற்பனை நடத்தப்படவிருப்பதற்கான, பிணைக்காப்பு அமலாக்கம் விதிகளின், விதி 8 மற்றும் 9 ன் கீழான அறிவிப்பு எனவும் கருதிக்கொள்ள வேண்டும்.

13). ஏதேனும் காரணத்துக்காக, இதன் மேற்குறிப்பிட்டவாறு ஏலம் நடைபெறவில்லையெனில், ARCIL க்கு பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(5) மற்றும் சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏதேனும் இதர முறைகளின் கீழ், ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய உரிமை உள்ளது.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்
Arcil-Retail Port-004-E Trust – ன் அறங்காவலர்

இடம் - வேலூர்
தேதி - 26 நவம்பர் 2024



படிவம் எண். I.T.C.P.17

(நிதிநிறுவனங்களின் கடன் மீட்பு சட்டம், 1993-இன் பிரிவுகள் 25 முதல் 29 வரை மற்றும் ... 1961-ஆம் ஆண்டு ...) [illegible]

ஏல விற்பனை பிரகடனம் (SALE PROCLAMATION)

[illegible]

DRC எண்.27/2018 தேதி:12/11/2024

இந்தியன் வங்கி ... மனுதாரர் Vs ... [illegible]

ஒப்பம்/- (பி.செல்வகுமார்) வசூல் அலுவலர்


ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

# கற்திட்டை அமைப்புடன் கூடிய 400 ஆண்டுகள் சதிக்கல் கண்டெடுப்பு

**திருப்பத்தூர், நவ.25:** நாட்டறம்பள்ளி அருகே கற்திட்டை அமைப்புடன் கூடிய சதிக்கல் கண்டெடுக்கப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம், நாட்டறம்பள்ளியில் இருந்து 13 கி.மீ தொலைவில் உள்ள திம்மாம்பேட்டை பகுதியில் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரிப் பேராசிரியர் ஆ.பிரபு, சமூக ஆர்வலர் வே. ராதாகிருஷ்ணன், முத்தமிழ் வேந்தன், மகேந்திரன், சந்திரசேகரன் ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது புல்லூர் காந்தி நகர் எல்லையில் கற்திட்டை அமைப்புடன் கூடிய சதிக்கல் ஒன்றைக் கண்டறிந்தனர். இது குறித்து பிரபு கூறியதாவது,

திம்மாம்பேட்டை பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டபோது 4 அடி உயரமும் 4 ணீ அடி அகலமும் கொண்ட 3 பலகைக் கற்களில் அமைக்கப்பட்ட சதிக்கல் இருப்பது கண்டறியப்பட்டது. புதர் மண்டியிருந்த அப்பகுதியினைச் சுத்தம் செய்து சதிக்கற்கல்லை பார்த்தபோது, பலகைக் கல்லில் வீரன் தன் வலது கையில் பிரம்மாண்ட போர் வாளும் இடது கையில் துப்பாக்கியினையும் ஏந்தியவாறு உள்ளார்.



நாட்டறம்பள்ளி அருகே கண்டெடுக்கப்பட்ட கற்திட்டை அமைப்புடன் கூடிய சதிக்கல்.

அவரது கழுத்திலும் கைகளிலும் அணிகலன்களை அணிந்துள்ளார். இடையில் கச்சையும் அதனோடு சிறு கத்தியும் வைத்துள்ளார். வீரனது அருகில், அவர் இறந்தவுடன் உடன் கட்டை ஏறிய அவரது மனைவியும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளார்.

அப்பெண்ணின் வலது கையில் கள் குடத்தினை ஏந்திய நிலையில் உள்ளார். இடது கரத்தினை வீரனை நோக்கிக் காட்டியபடி உள்ளார். இது வீரர்கள் போர்க்களத்தில் போரிட்டு இறந்து சொர்க்கலோகம் சென்றார் என்பதை அறிவிப்பதாகும்.

இறந்தவர்களை அடக்கம் செய்த இடத்தில் கற்திட்டை எனும் கல் கட்டுமான அமைப்பை ஏற்படுத்துவது பெருங்கற்கால மக்களின் வழக்கமாகும். அதனை நினைவுகூரும் விதமாக இங்குள்ள சதிக்கல் அமைந்துள்ளது.

வரலாற்றின் அடிப்படையில், ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே துப்பாக்கி இங்கு அறிமுகமானது. அவ்வாறு அறிமுகமான துப்பாக்கியானது நம்மவர்கள் கரங்களுக்கு வந்து சேரப் பல்லாண்டுகள் ஆனது. ஐரோப்பியர் அவ்வளவு எளிதில் துப்பாக்கியினை நம்மிடம் கொடுக்கவில்லை.

மேலும் அதிகாரம் படைத்த மன்னர்கள், தளபதிகள் மட்டுமே தொடக்க காலத்தில் துப்பாக்கியினைப் பெற்றிருந்தார்கள்.

அவ்வகையில், இச்சதிக்கல்லில் வீரனின் கையில் துப்பாக்கி இருப்பதால், அவ்வீரர் ஒரு படைத்தளபதியாகவோ அல்லது குறுநிலத் தலைவனாகவோ இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

தொடர்ந்து அந்நடுகல் குறித்து அவ்வூர் மக்களிடம் கேட்டபோது, ஒரு காலத்தில் வழிபாட்டில் இருந்து பின்னர் கைவிடப்பட்ட சதிக்கல் இதுவென அறியமுடிந்தது. இச்சதிக்கல் 16 அல்லது 17-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்ததாக இருக்க வாய்ப்புள்ளது. ஏறத்தாழ 400 ஆண்டுகள் வரலாற்றுச் சின்னமாகக் இச்சதிக்கல் காட்சியளிக்கிறது என்றார்.

# வெளிநாட்டில் வேலைக்கு அனுப்புவதாக மோசடி

## போலீஸார் விசாரணை

**வாணியம்பாடி, நவ.25:** நாட்டறம்பள்ளி அருகே வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்புவதாக கூறி பணம் பெற்று மோசடியில் ஈடுபட்ட நபரிடம் பாதிக்கப்பட்டோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. திம்மாம்பேட்டை போலீஸார் நேரில் விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில் நாட்டறம்பள்ளி அடுத்த நாயனசெருவு கிராமத்தைச் சேர்ந்த ராஜா மகன் சுபாஷ் (36). அதே பகுதியை சேர்ந்த ஜெயராமன் மகன் பூபதி(34).

இவர்கள் இருவரும் கூட்டாக சேர்ந்து நியூஸிலாந்துக்கு படித்த இளைஞர்களை வேலைக்கு அனுப்புவதாகவும் மாதம் ரூ.1.5 லட்சம் முதல் ரூ.3 லட்சம் ஊதியம் கிடைக்கும் எனக் கூறி கடந்த ஆண்டு அக்ராகரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள் 40 பேரிடம் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதல் 4 லட்சம் வரை பணம் வசூலித்தார்களாம்.

ஓராண்டு கடந்தும் நியூஸிலாந்துக்கு யாரையும் அனுப்பவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த இளைஞர்கள் ஜூலை மாதம் நாயனசெருவில் வீட்டில் இருந்த சுபாஷ் மற்றும் பூபதி ஆகியோரிடம் பாஸ்போர்ட் மற்றும் கட்டிய பணத்தை திருப்பித் தருமாறு கேட்டுள்ளனர். அப்போது சுபாஷ் நவம்பர் 25-ஆம்தேதி பாஸ்போர்ட் மற்றும் கட்டிய பணத்தை திருப்பித் தருவதாக கூறியுள்ளார்.

இதையடுத்து அக்ராகரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பெற்றோருடன் சுபாஷ் வீட்டுக்கு சென்றனர். இதையறிந்த சுபாஷ் அங்கிருந்து தலைமறைவானார்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் நாயனசெருவு எம்ஜிஆர் சிலை அருகே தலைமறைவான மற்றொரு கூட்டாளி பூபதியை கையும் களவுமாக பிடித்து கட்டிய பணத்தை திருப்பிக் கேட்டு அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து திம்மாம்பேட்டை உதவி ஆய்வாளர் ருகன் தலைமையிலான போலீஸார் சென்று பாதிக்கப்பட்ட இளைஞர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது இதுதொடர்பாக திருப்பத்தூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளிக்கவேண்டும் எனக் கூறி கூட்டத்தை கலைத்தனர்.

தொடர்ந்து பணமோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் பூபதியிடம் போலீஸார் விசாரித்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# நாகநாத சுவாமி கோயிலில் 108 வலம்புரி சங்காபிஷேகம்



ஆம்பூர் நாகநாத சுவாமி கோயிலில் நடைபெற்ற 108 வலம்புரி சங்கு பூஜை.

**ஆம்பூர், நவ. 25:** கார்த்திகை சோம வாரத்தையொட்டி, ஆம்பூர் நாகநாத சுவாமி கோயிலில் 108 சங்காபிஷேகம் திங்கள்கிழமை நடைபெற்றது.

ஆம்பூர் அருள்மிகு சமயவல்லி தாயார் உடனுறை சுயம்பு ஸ்ரீ நாகநாத சுவாமி கோயிலில் கார்த்திகை மாத 2-ஆவது சோமவாரத்தை முன்னிட்டு, கலச ஸ்தாபனம், 108 வலம்புரி சங்கு பூஜை, மூலவருக்கு 108 வலம்புரி சங்காபிஷேகம் நடைபெற்றது. இதில், திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## பரிசளிப்பு...



ஈஷா யோகா மையம் சார்பில் ஆற்காட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற காவேரிப்பாக்கம் அணிக்கு ஞாயிற்றுக்கிழமை ரூ.9,000 பரிசளித்த மகாத்மா காந்தி முதியோர் காப்பகத்தின் துணைத் தலைவர் எஸ்.ஆர்.பி பென்ஸ் பாண்டின் உள்ளிடோர்.